கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/ இரண்டாம் அரையாண்டுச் சிறப்புக் கலைமாணித் தேர்வு

2013/2014 (மார்ச் 2015)

TLS 3204 நவீன இலக்கியக் கொள்கையும் விமர்சனக் கொள்கையும்

04 JUN 2015
EASTERN UNIVE... SRI LANKA

**Modern Literary and Critical Theory**

நேரம்: 3 மணித்தியாலங்கள்

எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

---

1. இலக்கியக் கோட்பாடு, இலக்கிய விமர்சனக் கோட்பாடு, இலக்கிய விமர்சனம் ஆகிய துறைகளுக்கிடையிலான தொடர்புகளை ஆராய்க. (25 புள்ளிகள்)

2. "இலக்கியம் யதார்த்த வாழ்க்கையைப் பிரதிபலிக்க வேண்டும் என்பதும் சமத்துவமான சமுதாயத்தை ஏற்படுத்துவதில் இலக்கியத்துக்குக் காத்திரமான பங்குண்டு என்பதும் மார்க்சிய இலக்கியக் கோட்பாட்டின் அடிப்படைகளாகும்." இக்கூற்றை ஆராய்க (25 புள்ளி-கள்)

3. பின்னை நவீனத்துவம் முன்வைக்கும் சிந்தனைப் போக்குகளைத் தந்து, அவைபற்றிய விமர்சனங்களை ஆராய்க. (25 புள்ளிகள்)

4. பெண்மைய விமர்சனம் (Gynocriticism) இலக்கியப் படைப்புக்களை மட்டுமல்லாது இலக்கியத்தின் படைப்புச் சூழல் பற்றி ஆராய்வதிலும் அதிக கவனம் செலுத்துகின்றது." ஆராய்க. (25 புள்ளிகள்)

5. "புதிய வரலாற்றிய இலக்கிய விமர்சனம் (New Historicism) பிரதிக்கு மாத்திரமன்றி பிரதிக்கு அப்பாற்பட்ட தரவுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (25 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** விளக்கக் குறிப்பு எழுதுக.

   (அ) சூழலிய விமர்சனம் (Eco criticism)

   (ஆ) பின்னைக் காலனித்துவ இலக்கிய விமர்சனக்கோட்பாடு (Post colonial Literary/ Critical Theory)

   (இ) கட்டவிழ்ப்பு வாதம் (Deconstruction)

   (ஈ) சசூர் (Sausurre) முன்வைக்கும் மொழியின் அமைப்புப் பற்றிய கருத்துக்கள்.

   (உ) தலித்திய இலக்கிய விமர்சனக் கோட்பாடு (Dalit Literary/ Critical Theory)

(12½ புள்ளிகள் x 2)